**தலைப்பு 277 – மொனராகலை மாவட்ட செயலகம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

மொனராகலை மாவட்ட செயலகத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் மொனராகலை மாவட்ட செயலகத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2019 மே 29 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்திற்குரிய விரிவாக முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 மே 15 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொனராகலை மாவட்ட செயலகத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

---

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக் கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்தினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38(1) (இ) உப பிரிவின் பிரகாரம் அரசின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்துதல் வேண்டியதுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

---

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(ஈ) பிரிவு மற்றும் 38 ஆம் பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்கள் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) முன்னைய ஆண்டிற்காக நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் தேவைப்பாடு இல்லாதிருந்தமையால் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாக கூறுவதற்கு முடியாதுள்ளது.

(ஆ) மாவட்ட செயலகத்தினால் முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் தேவைப்பாடு இல்லாதிருந்தமைால நிதிக்கூற்றுக்கள் தொடர்பான பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்படவில்லை.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 கணக்கீட்டு குறைபாடுகள்

#### (அ) நிதிச் செயலாற்றல் கூற்று

கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட நிதிச் செயலாற்றல் கூற்று தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | நிதிச் செயலாற்றல் கூற்றில் ஏனைய பெறுவனவுகளாக ரூபா 114,008,097 என காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட மாதாந்த கணக்குப் பொழிப்பின் பிரகாரம் அது ரூபா 113,905,010 ஆக இருந்தது. அதன் பிரகாரம் ரூபா 103,087 கூடுதலாக காட்டப்பட்டிருந்தது. | 2018 நவம்பர் 21 ஆந் திகதிய 267/2018 ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் சுற்றறிக்கையின் 7(ii) பந்தியின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | வேறுபாடொன்று அவதானிக்கப்படவில்லை |
| (ii) | மேற்படி (அ)(i) பந்தியின் பிரகாரமான கணக்காய்வு அவதானிப்பு காரணமாக நிதிச் செயலாற்றல் கூற்றில் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கட்டுநிதிக் கணக்கின் மீதி ரூபா 103,087 ஆல் கூடுதலாக காட்டப்பட்டிருந்தது. | 2018 நவம்பர் 21 ஆந் திகதிய 267/2018 ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் சுற்றறிக்கையின் 7(ii) பந்தியின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | வேறுபாடொன்று கணக்கில் காணப்படவில்லை |

**(ஆ) நிதி நிலைமை தொடர்பான கூற்று**

நிதி நிலைமை தொடர்பான கூற்று தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|---|
| (i) | மாவட்டச் செயலகத்தின் தகவல்களின் பிரகாரம் ஆதனங்கள், கிரயம், மற்றும் உபகரணங்களின் பெறுமதி ரூபா 2,209,003,732 ஆக இருந்தது. எனினும், நிதி நிலைமைக் கூற்றில் அப்பெறுமதி ரூபா 2,034,406,144 என குறிப்பிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ரூபா 174,597,588 ஆன வேறுபாடொன்று கண்டறியப்பட்டது. | மாவட்ட செயலகம் சகல நிதியல்லாத சொத்துக்கள் கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் இவ்வேறுபாடு சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ii) | மெதகம பிரதேச செயலகத்திற்குரிய ரூபா 4,720,000 பெறுமதியான 03 அரசின் வீட்டுக் காணிகள் இரண்டு தடவை நிதி நிலைமைக் கூற்றில் உள்ளடக்கப்பட்டிருந்தன. | எதிர்வரும் ஆண்டில் நிதிக் கூற்றுக்களில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும் | எதிர்வரும் ஆண்டில் நிதிக் கூற்றுக்களில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும் |
| (iii) | மீளாய்வாண்டில் நிர்மாணிக்கப்பட்ட கட்டிடங்கள் மற்றும் நிர்மாணங்களின் பெறுமதி ரூபா 89,874,143 ஆக இருந்த போதிலும் இது ரூபா 23,603,115 குறைத்து ரூபா 66,271,028 என நிதி நிலைமைக் கூற்றில் குறிப்பிடப்பட்டிருந்தன. | எதிர்வரும் ஆண்டில் நிதிக் கூற்றுக்களில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும் | எதிர்வரும் ஆண்டில் நிதிக் கூற்றுக்களில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் |
| (iv) | திணைக்கள புத்தகங்களின் பிரகாரம் அரச உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்கில் 2015 மற்றும் | நிதிப்பிரமாணம் 427 இன் பிரகாரம் திணைக்கள புத்தகங்கள் திறைசேரி | திறைசேரியிடமிருந்து கிடைத்த கட்டுநிதியின் கீழ் |

| | | |
|---|---|---|
| 2017 ஆம் ஆண்டுகளுக்குரியதாக தீர்வு செய்யப்படாத ரூபா 382,556 கூட்டுத்தொகையான வரவு மீதிகள் மற்றும் 2016 ஆம் ஆண்டிற்குரிய தீர்வு செய்யப்படாத ரூபா 123,300 தொகையான செலவு மீதிகள் திறைசேரி புத்தகங்களுடன் ஒப்பிடப்பட்டிருக்கவில்லை. | புத்தகங்களுடன் ஒப்பிட்டு மீதிகளை தீர்வு செய்யப்பட வேண்டும். | காண்பிக்கப்பட்டிருந்தது. |

**(இ) காசுப் பாய்ச்சல் கூற்று**

---------------------------------------

காசுப்பாய்ச்சல் சுற்று தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (i) செயற்பாட்டு நடவடிக்கைகளில் உருவாகிய காசுப்பாய்ச்சலின் பெறுமதியாக ரூபா 2,674,911,932 தொகை குறிப்பிடப்பட்டிருந்தது. திறைசேரியிடமிருந்து கிடைத்த கட்டுநிதி, வைப்புக்கள் பெறுவனவு மற்றும் ஏனைய பெறுவனவுகளின் கூட்டுத்தொகை ரூபா 2,747,975,512 ஆக இருந்தன. அதன் பிரகாரம் ரூபா 73,063,580 குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | 2018 நவம்பர் 21 ஆந் திகதிய 267/2018 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டும். | நிதி நடவடிக்கைகளில் இருந்து உருவான காசுப்பாய்ச்சலின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது. |
| (ii) திறைசேரிக்கு அனுப்பியிருந்த ரூபா 50,000,000 தொகை திறைசேரிக்கு தீர்வு செய்த கட்டுநிதியின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது. | 2018 நவம்பர் 21 ஆந் திகதிய 267/2018 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டும் | மாதாந்த கணக்கு பொழிப்பின் பிரகாரம் திறைசேரிக்கு அனுப்பியுள்ளதுடன் அது திறைசேரியிலிருந்து கிடைத்த கட்டுநிதியின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது. |
| (iii) அரச உத்தியோகத்தர்களுக்கு முற்பணக் கடன் மீள பெறுவனவுகளின் பெறுமதி ரூபா 49,475,341 தொகை முதலீட்டு | 2018 நவம்பர் 21 ஆந் திகதிய 267/2018 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் | திறைசேரியிலிருந்து கிடைத்த கட்டுநிதியின் கீழ் காண்பிக்கப்பட்டுள்ளது. |

| | | |
|---|---|---|
| செயற்பாடுகளிலிருந்து உருவாகிய காசுப்பாய்ச்சலின் கீழ் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. | தயாரிக்கப்பட வேண்டும். | |
| (iv) அரச உத்தியோகத்தர்களுக்கு முற்பணக் கடனாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த ரூபா 58,817,145 தொகை முதலீட்டு செயற்பாடுகளிலிருந்து உருவாகிய காசுப்பாய்ச்சலின் கீழ் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. | 2018 நவம்பர் 21 ஆந் திகதிய 267/2018 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டும். | திறைசேரியிலிருந்து கிடைத்த கட்டுநிதியின் கீழ் காண்பிக்கப்பட்டுள்ளது. |

**1.6.2 கணக்காய்விற்கான சான்றுகளின்மை**

கீழே காட்டப்பட்டுள்ள கொடுக்கல் வாங்கல்களை உறுதிப்படுத்துவதற்கு போதியளவிலான சான்றுகள் சமர்ப்பிக்கப்படாமையால் அக்கொடுக்கல் வாங்கல்களை திருப்திகரமாக சான்றுறுதி செய்ய முடியாதிருந்தது.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (i) என்டர் பிரஸ்சஸ் லங்கா கண்காட்சி நடாத்தப்பட்டிருந்த மூன்று நாட்களுக்காக கண்காட்சி கூடத்திற்கு மின்சாரம் வழங்கியமைக்காக ரூபா 33,582,527 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. அச்செலவினத்தில் உள்ளடக்கப்பட்ட ரூபா 22,724,451 கூட்டுத்தொகையான செலவினத்தை உறுதிப்படுத்துவதற்காக வாகன ஓட்டக் குறிப்புக்கள், செக்ரோல் பட்டியல் போன்ற சான்றுகள் சமர்ப்பிக்கப் பட்டிருக்கவில்லை. | நிதிப்பிரமாணம் 137 மற்றும் 139 இன் பிரகாரம் உரிய சான்றுகள் பெற்றுக் கொள்ளப்பட்டதன் பின்னர் செலவினத்தை அங்கீகரித்தல் மற்றும் சான்றுறுதிப்படுத்தப் பட்டதன் கொடுப்பனவு செய்யப்படல் வேண்டும். | இலங்கை மின்சார சபையினால் அச்செயற்பாடுகள் வருடாந்த பெறுகைத் திட்டத்தின் பிரகாரம் விலைக்கு பெறும் பொருட்கள் பயன்படுத்தப்பட்டதாக குறிப்பிடப்பட்டிருந்தது. |
| (ii) 2018 ஆம் ஆண்டில் ரூஹுனு கதரகம மற்றும் கொடபோவ குடா கதிர்காமம் தேவாலயங்களின் வருடாந்த எசல விழாவிற்கான மேலதிக வசதிகளை | நிதிப்பிரமாணம் 137 மற்றும் 139 இன் பிரகாரம் உரிய சான்றுகள் பெற்றுக் கொள்ளப்பட்டதன் பின்னர் செலவினத்தை அங்கீகரித்தல் | இலங்கை மின்சார சபையினால் சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீட்டின் பிரகாரம் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை |

| | |
|---|---|
| வழங்குவதற்கான பாதுகாப்பு விளக்குகளை பொருத்துவதற்கு ரூபா 14,664,834 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. அதற்குரிய விபரமான செலவின மதிப்பீடு பட்டியல் அல்லது செலவினங்களை உறுதிப்படுத்தும் ஏனைய ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படவில்லை. | மற்றும் சான்றுறுதிப்படுத்தப் பட்டதன் கொடுப்பனவு செய்யப்படல் வேண்டும். |

### 1.6.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்காமை

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகளுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து தரப்படுகின்றன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமை | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|---|
| (i) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபனவிதிக் கோவையின் XIX ஆம் அத்தியாயத்தினது 5.2.3 ஆம் பிரிவு | 182,475 | மாவட்ட செயலகத்தினால் 2016, 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளுக்காக விவாகமாதவர்களின் விடுதிகளின் மதிப்பீட்டு அறிக்கையின் பிரகாரம் வாடகை அறவிடப்பட்டிருக்க வில்லை | புதிய மதிப்பீட்டு அறிக்கையின் பிரகாரம் வாடகை நிலுவை அறவிடப்பட வேண்டும். | மாகாண மதிப்பீட்டு திணைக்களத்திடமிருந்து கிடைக்கும் ஆலோசனைகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும் |
| (ii) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபனவிதிக் கோவையின் 104(4)ஆம் பிரமாணம் | 2,697,350 | 2018 ஒக்தோபர் 02 ஆந் திகதி சியபலாண்டுவ பிரதேச செயலகத்திற்குரிய கெப் வண்டியொன்று 6 ½ மாதங்களுக்கு மேற்பட்ட காலங் கடந்திருந்த போதிலும் பூரணஅறிக்கை சமர்ப்பிக்கப்படவில்லை. | நிதிப் பிரமாணம் 104(4) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | திருத்த வேலைகள் தொடர்பாக இறுதி பட்டியல் சமர்ப்பிக்கப்பட்டமையால் முழு அறிக்கை சமர்ப்பிப்பதற்கு முடியாதிருந்தது. |

### 1.6.4 வரி தேவைப்பாடுகளுக்குள் இணங்காமை

---

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகளுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து தரப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | பிபில பிரதேச செயலகம் மற்றும் படல்குப்புற பிரதேச செயலகங்களினால் ரூபா 253,623 ஆன பெறுமதி சேர் வரித்தொகை ஒப்பந்தக்காரர்களுக்கு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த போதிலும் வரி செலுத்தும் திகதி வரை ஒப்பந்தக்காரர் தொடர்ந்து வரி செலுத்துபவராக உறுதிப்படுத்தி விடுவிப்பு சான்றிதழ் கொண்டிருக்கவில்லை. | பெறுமதி சேர் வரி அடிப்படையிலான வரிக் கொடுப்பனவிற்கு முன்னர் தொடர்ச்சியாக வரி செலுத்துபவராக உறுதிப் படுத்துவதற்கு விடுவிப்பு சான்றிதழ் பெற்றுக் கொள்ளப்பட வேண்டும். | வரும் எதிர்காலங்களில் சான்றிதழை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ii) | ‘‘என்டர்பிரய்ஸ் ஸ்ரீலங்கா’’ கண்காட்சி காணியில் உட்புறமாக தற்காலிக வேலியை நிர்மாணிப்பதற்காக ஒப்பந்தக்காரரால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த கூறுவிலையில் பெறுமதி சேர் வரி தொடர்பாக குறிப்பிடப்படாதிருந்த போதிலும் கொடுப்பனவின் போது பெறுமதி சேர் வரியாக ரூபா 136,950 தொகை மாவட்ட செயலகத்தினால் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | ஒப்பந்தம் வழங்கும்போது இணங்கிய பெறுமதி மாத்திரம் கொடுப்பனவு செய்யப்பட வேண்டும். | உரிய ஒப்பந்தக்காரர் பெறுமதி சேர் வரிக்காக பதிவு செய்துள்ளார். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 பொறுப்புக்கள் மற்றும் பொறுப்புக்களுக்கு உட்படல்

மாவட்ட செயலகத்தினால் மீளாய்வாண்டின் இறுதியில் மேற்கொள்ளப்பட்டிருந்த பொறுப்புக்கள் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 02 செலவின விடயங்களுக்காக மேற்கொள்ளப்பட்டிருந்த நிதிஏற்பாடுகளில் செலவிடப்பட்டதன் பின்னர் சேமிப்புக்கள் ரூபா 83,316 ஆல் மிகைத்து பொறுப்புக்கள் ஏற்படுத்தப்பட்டிருந்தது. | நிதிப்பிரமாணம் 94(1) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்குமாறு உரிய உத்தியோகத்தர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. |

### 2.2 ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களால் வழங்கப்பட்டுள்ள நிதியேற்பாட்டின் பயன்பாடு

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| **(அ) சனாதிபதி செயலகம்** | | |
| (i) புத்தள பிரதேச செயலகத்தினால் "கிராம சக்தி நிகழ்ச்சித்திட்டம்" இன் கீழ் இரண்டு கிராம சேவைகள் பிரிவின் 48 நலனாளிகளுக்காக | தேனீக்கள் சமூகத்தை வழங்கும் நோக்கம் நிறைவேற்றப்படும் வகையில் அரசின் நிதி ஆக்கபூர்வமாக | இயற்கை சூழலில் ஏற்படும் மாற்றங்களினால் தேனீக்கள் சமூகம் இடம் பெயர்ந்துள்ளன. |

| | | | |
|---|---|---|---|
| | ரூபா 499,200 செலவு செய்து தேனீக்கள் பெட்டிகள் மற்றும் உபகரணங்கள் பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தன. 35 நலனாளிகளுக்கு வழங்கப்பட்டிருந்த தேனீக்கள் பெட்டிகளில் தேனீக்கள் இல்லாமல் இருந்ததாக வெளிக்கள உத்தியோகத்தர்களால் அறிக்கையிடப்பட்டிருந்தன. | பயன்படுத்தப்படல் வேண்டும். | |
| (ii) | பிபில பிரதேச செயலகத்தினால் ''திவிசர சமூக செயற்திறன் நிகழ்ச்சித்திட்டம் - 2017'' இன் கீழ் காளாண் பயிர்ச்செய்கை செயற்திட்டத்திற்காக நலனாலி ஒருவருக்கு ரூபா 163,090 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த போதிலும் அச்செயற்திட்டம் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. | செயற்திட்டத்தை நிறைவேற்றுவது தொடர்பாக பரீட்சிக்கப்பட்டு தேவையான நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். | இந்நலனாளியால் செயற்திட்டத்தை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| (iii) | ''கிராம சக்தி மக்கள் வர்த்தகம்'' நிகழ்ச்சித்திட்டத்தின் செயற்பாடு களுக்காக பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்காக மாதாந்தம் கூடியது ரூபா 3,000 இற்கு உட்பட்டு பிரயாணச் செலவினம் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும், அதற்கு இணங்காத வகை கதிர்காமம் வெள்ளவாய மற்றும் தனமல்வில ஆகிய பிரதேச செயலகங்களினால் 10 உத்தியோகத்தர்களுக்கு ரூபா | சுற்றறிக்கை அறிவுறுத்தல்களுக்குரிய இணங்காத வகையில் அரச உத்தியோகத்தர்களுக்கு கொடுப்பனவு செய்யும் போது தாபன பணிப்பாளரின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டும். இக்கொடுப்பனவிற்காக தாபன பணிப்பாளரின் மேவுகை அங்கீகாரத்தை பெற்றுக்கொள்ள | பணிப்பாளர் (பெறுகை)யின் எம்ஓ/டீஎஸ்/டீபீஎஸ்/டீ/02/04 ஆம் இலக்க 2018 செப்தெம்பர் 04 ஆந் திகதிய கடிதத்தின் பிரகாரம் கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| | 189,000 கூட்டுத்தொகையான மாதாந்த கொடுப்பனவொன்று முறையான அங்கீகாரமின்றி கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | முடியாதிருந்தால் பொறுப்பு வாய்ந்த தரப்பினர் தொடர்பாக உரிய நடவடிக்கைகளை எடுக்கப்பட வேண்டும். | |
| **(ஆ)** | **பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சு**<br>-----------------------------------------------------------------<br>----<br>சியம்பலாண்டுவ மற்றும் பிபில பிரதேச செயலக பிரிவுனுள் “மொனறாகல” மாவட்ட வினைத்திறன் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் 2017” செயற்படுத்துவதற்காக மாவட்ட செயலகத்தினால் ரூபா 21,517,286 செலவிடப்பட்டிருந்தது. அது தொடர்பாக பின்வரும் குறைபாடுகள் கண்டறியப்பட்டன. | | |
| (i) | சியம்பலாண்டுவ பிரதேச செயலகத்தினால் 161 நலனாளிகளுக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 3,676,168 தொகையான பொருட்கள் உரிய நலனாளிகளால் உரிய செயற்பாட்டிற்கு பயன்படுத்தப்படாமல் விளைவற்றுக் காணப்பட்டன. | செயற்திட்டம் அமுல்படுத்தியதன் பின்னர் பின்தொடர் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | நலனாலிகளுடன் ஏற்படுத்திக் கொண்ட உடன்படிக்கையின் பிரகாரம் எதிர்வரும் காலங்களில் நடவடிக்கை எடுக்கின்றேன் |
| (ii) | பிபில பிரதேச செயலகத்தினால் 239 நலனாளிகளுக்கு வழங்கப்பட்டிருந்த 3824 கூரை தகடுகள் பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டமை உறுதிப் படுத்தப்பட்டிருக்கவில்லை. மலசல கூட உதவி வழங்கப்பட்டிருந்த 198 பேர்களுக்காக நலனாளி யொருவருக்கு வழங்கப்பட | செயற்திட்டம் அமுல்படுத்தியதன் பின்னர் பின்தொடர் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றேன் |

| | | |
|---|---|---|
| வேண்டிய 125 பிளொக் கல் அளவினை வழங்காமல் ஏனைய பொருட்கள் வழங்கிய காரணத்தினால் மலசலகூடம் நிர்மாணம் இடம் பெற்றிருக்கவில்லை. | | |
| **(இ) தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சு** | | |
| பன்முகப்படுத்தப்பட்ட அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் பிபில மற்றும் மொனறாகல ஆகிய பிரதேச செயலகங்களினால் 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டு கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 1,167,345 ஆன பொருட்கள் 2019 மே 14 ஆந் திகதி வரையிலும் நலனாளிகளுக்கு பகிர்ந்தளிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக் வில்லை. | நிர்ணயிக்கப்பட்ட காலப்பகுதியில் நலனாளிகளுக்கு கொள்வனவு செய்யப்பட்ட பொருட்கள் பகிர்ந்தளிக்கப்பட வேண்டிய போதிலும் அது தொடர்பாக உறுதிப்படுத்துவதற்கு போதியளவு பதிவேடுகள் பேணப்பட்டிருக்கவில்லை. | பொருட்கள் பகிர்ந்தளிக்கப்பட்டு முடிவடைந்துள்ளது. |
| **(ஈ) மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சு** | | |
| படல்கும்புற பிரதேச செயலகத்தினால் 2017 ஆம் ஆண்டின் போது நிலைபேறான விவசாய நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 20 நலனாளிகளுக்கு 10 தவணைகளில் மீள அறவிடும் அடிப்படையில் ரூபா 132,000 பெறுமதியான உபகரணங்கள் வழங்கப்பட்டிருந்தன. குறித்த தவணை பணத்தில் ரூபா 101,400 மீள அறவிடப்பட்டிருக்கவில்லை. | அறவிடப்பட வேண்டிய தவணை பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை . | எதிர்காலத்தில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

**2.3 வைப்புக்கள்**

---------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| 2018 திசெம்பர் 31 இல் உள்ளாறு வைப்புக் கணக்கின் மீதி ரூபா 69.19 மில்லியனாக இருந்தது. இம்மீதிகளிலிருந்து ரூபா 8.36 மில்லியனான வைப்பு மீதிகள் 02 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக இருந்து வந்த போதிலும் அம்மீதிகள் தொடர்பாக நிதிப்பிரமாணம் 571(3) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | காலம் கடந்த வைப்புக்கள் தொடர்பாக நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றேன் |

**2.4 முற்பணக் கணக்கு மீதிகள்**

---------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவீடுகள் நிலுவையாக இருந்த தனி கடன் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 2,838,818 ஆக இருந்ததுடன், அந்நிலுவை கடன் மீதியில் 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக அறவிடப்படாமல் காணப்படும் கடன் மீதி ரூபா 2,413,983 ஆக இருந்தது. | நிலுவை கடன் மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

### 3.1 திட்டமிடல்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மாவட்ட செயலகத்தினால் சமர்ப்பிக்கப்பட்ட செயல்நடவடிக்கைத் திட்டம் 2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 2014/01 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு இணங்க கீழே காட்டப்பட்டுள்ள தேவைப்பாடுகள் மற்றும் தகவல்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.<br>(i) மீளாய்வாண்டிற்குரிய நாளதுவரையாக்கப்பட்ட நிறுவன ஒழுங்கமைப்பு வரைபடம்<br>(ii) அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் மற்றும் தற்போது உள்ள பதவியணியினர் தொடர்பான விபரங்கள்<br>(iii) ஆண்டில் வருடாந்த பாதீட்டை அடிப்படையாகக் கொண்ட முன்னுரிமையின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட செயல் நடவடிக்கைத் திட்டம் (Activity Plan)<br>(iv) செயற்படுத்தப்பட்ட காலசட்டகம் மற்றும் அச்செயற்பாடுகளிலிருந்து எதிர்பார்க்கும் வெளியீடுகள் / பெறுபேறுகள்<br>(v) வருடாந்த செயற்பாடுகளுக்கு தேவையான கட்டுநிதி தேவைப்பாட்டு திட்டம் | சுற்றறிக்கை ஏற்பாடுகள் மற்றும் வழிகாட்டலுக்கு இணங்க வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்படல் வேண்டும். | எதிர்வரும் காலங்களில் சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்குமாறு உத்தியோகத்தர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. |

(vi) திட்டமிடப்பட்ட பிரதான அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்திற்கான வருடாந்த பெறுகை திட்டம்

(vii) உள்ளக கணக்காய்வு திட்டம்

**3.2 வருடாந்த செயலாற்றல் அறிக்கை**

கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட வருடாந்த செயலாற்றல் அறிக்கை தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 ஆம் ஆண்டின் சமுர்த்தி நலனாளிகளின் எண்ணிக்கை 44,276 முதல் 44,907 வரையான வீச்சளவினை எடுத்திருந்தது. 2017 ஆம் ஆண்டில் நலனாளிகளின் எண்ணிக்கை 44,875 ஆக இருந்தனர். வெவ்வேறு வாழ்வாதார மட்ட அபிவிருத்தி செயற்திட்டங்கள் செயற்படுத்தப்பட்டிருந்த போதிலும் சமுர்த்தி நலனாளிகளின் எண்ணிக்கையில் குறைவொன்று இடம்பெற்றிருக்கவில்லை. | செயற்திறனாக வாழ்வாதார அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் செயற்படுத்தப்பட வேண்டும். | சமுர்த்தி நலனாளிகள் தொடர்பாக அமைச்சிலிருந்து கிடைக்கும் அறிவுறுத்தல்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

## 3.3 உள்நாட்டு நிதியுதவித் திட்டங்களிலிருந்து செயற்படுத்தப்படும் செயற்திட்டங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) ''என்டர்பிரய்சஸ் ஸ்ரீலங்கா'' கண்காட்சிக்கான ரூபா 68.25 மில்லியன் செலவிடப்பட்டிருந்ததுடன் அது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவு பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் கண்டறியப்பட்டுள்ளன. | | |
| (i) கண்காட்சி நடைபெற்ற காணியை தயார்படுத்துவதற்காக ஒப்பந்தக்காரரால் ஈடுபடுத்தப்பட்டிருந்த வாகனங்கள் மற்றும் இயந்திரங்கள் என்பவற்றிற்காக ரூபா 14.34 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. இயந்திரங்கள், பொறிகள், ஓட்டத்தில் ஈடுபடுத்தப்பட்ட மணித்தியாலங்களின் அளவு, வாகனங்கள் ஓட்டத்தில் ஈடுபடுத்தப்பட்ட திகதிகள் என்பவற்றை உறுதிப்படுத்துவதற்காக மேற்பார்வை உத்தியோகத்தர்களின் உறுதிப்படுத்தலுடன் போக்குவரத்து வேலைத்தாள் (Job Card) கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாமையால் அச் செலவினத்தை திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது. | கொடுப்பனவு செய்வதற்கு முன்னர் கொடுப்பனவை உறுதிப்படுத்துவதற்கு மேற்பார்வை உத்தியோகத்தரின் பரிந்துரை மற்றும் அங்கீகாரத்தை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் ஒப்பந்தக்காரர்களுக்கு கொடுப்பனவு செய்யும் போது வேலைப்பத்திரம் தொடர்பாக கவனம் செலுத்த வேண்டுமென உத்தியோகத்தர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. |
| (ii) கண்காட்சி பூமியின் உள்ளக வீதி முறைமை ரூபா 2.06 மில்லியன் செலவில் பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. நிர்மாண நடவடிக்கை பூர்த்தி செய்யப்பட்டு 05 மாதங்கள் கடப்பதற்கு முன்னர் வீதிக்காக ஊற்றப்பட்டிருந்த் தார் கழன்று குழிகள் தோன்றியிருந்தன. | நிர்மாண வேலைகள் உரிய நியமத்தின் இணங்கும் வகையில் நிறைவேற்றும் வகையில் மேற்பார்வை செய்யப்பட வேண்டும். | எதிர்காலத்தில் நிர்மாண நடவடிக்கைகளின் தரம் மற்றும் நிலைத்திருத்தல் தொடர்பாக கவனம் செலுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| (iii) | கண்காட்சி இடத்தை தயாரிப்பதற்கு விடுவிப்பதற்காக 143 ஹியும் குழாய்கள் மற்றும் அதற்குரிய 60 கொலர்களுக்காக ரூபா 1.6 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. 2019 சனவரி 10 ஆந் திகதி அளவில் கண்காட்சி முடிவடைந்து ஐந்து மாதங்களுக்கு மேற்பட்ட காலம் கடந்திருந்த போதிலும் அக்குழாய்களும் கொலர்களும் விளைவற்றுக் காணப்பட்டன. | தற்போது மீதியாக காணப்படும் கொலர் மற்றும் ஹியும் குழாய்களை ஆக்க பூர்வமான அபிவிருத்தி செயற்பாடுகளுக்கு ஈடுபடுத்த நடவடிக்கை எடுக்கப்படும். | ஏற்றுக்கொள்கின்றேன். |
| (iv) | கண்காட்சி பூமியில் தடாகமொன்றை நிர்மாணிப்பதற்காக ரூபா 2.84 மில்லியன் செலவிடப்பட்டிருந்த போதிலும் இது நிர்மாணிக்கப்பட்டு ஐந்து மாதங்கள் கடப்பதற்கு முன்னர் தடாகம் பல இடங்களில் உடைந்து படிப்படியாக சேதமடைந்து காணப்பட்டது. | கண்காட்சிக்காக செய்யப்பட்ட நிர்மாணங்கள் கண்காட்சி முடிவடைந்ததன் பின்னர் வேறு பயன்பாட்டிற்கு எடுக்க கூடிய வகையில் திட்டமிடப்படல் வேண்டும். | இத்தடாகம் கண்காட்சிக்காக தற்காலிகமாக நிர்மாணிக்கப்பட்டிருந்தது. |
| (ஆ) | 10 பிரதேச செயலகங்களினால் செயற்படுத்தப்பட்டிருந்த செயற்திட்டங்களின் வேலைகள் குறைவாக நிறைவேற்றுதல், தவறான கூறுவிலைகள் பயன்படுத்தியிருந்தமை,வீதி விலை விபரங்கள் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட அறிவுறுத்தல்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படாமை, தாமத கட்டணங்கள் அறவிடப்படாமை அரசிற்கு சாதகமான வகையில் மதிப்பீடு தயாரிக்கப்படாமை போன்ற அவதானிப்புக்களால் ஒப்பந்தக்காரர்களுக்கு ரூபா 4.07 மில்லியன் கூட்டுத்தொகை கூடுதலாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | செயற்திட்டத்தின் மதிப்பீடு தயாரித்தல் மற்றும் செயற்படுத்துதல், செயற்திட்டத்தை பூர்த்தி செய்தல் கையளித்தல் என்பவற்றின் போது உரிய பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கூடுதலான கொடுப்பனவு தொடர்பாக விளக்கமளிக்கப்பட்டுள்ளது . |
| (இ) | மடுல்ல பிரதேச செயலகத்தினால் “கிராமிய உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் 2017” இன் கீழ் முன்பள்ளி கட்டிடமொன்றை நிர்மாணிக்கும் பணிக்காக | நிர்மாண நடவடிக்கைகள் அதன் நலன்களை பெற்றுக் கொள்ளும் வகையில் | 2019 ஆம் ஆண்டின் போது நிதி ஏற்பாட்டினை பெற்றுக்கொள்ள |

| | | | |
|---|---|---|---|
| | ரூபா 491,973 செலவிடப்பட்டிருந்தது. 2017 செப்தெம்பர் 22 ஆந் திகதி அளவில் அந் நிர்மாண நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்ட போதிலும் 2019 ஜனவரி 23 ஆந் திகதி வரையிலும் அக்கட்டிடத்தின் எஞ்சிய வேலைகள் பூர்த்தி செய்யப்படாமையால் வளவில் புதர்கள் முளைத்து விளைவற்றுக் காணப்பட்டது. | நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும் | நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஈ) | மெதகம பிரதேச செயலகத்தினால் 02 வீதிகளை மேம்படுத்துவதற்காக ரூபா 218,700 செலவிடப்பட்டிருந்தது. அச் செலவினம் வீதி விலை விபர அட்டவணையின் (HSR) மதியுரைக்கு முரணாகவும் இயந்திர வேலை செய்யும் குறிப்பு மாதிரியின் பிரகாரம் உறுதிப்படுத்தலொன்று இல்லாமல் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | வீதி நிர்மாணத்திற்குரிய அரசின் பிரமாணங்களின் பிரகாரம் கொடுப்பனவு செய்யப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றேன் |
| (உ) | பிபில பிரதேச செயலகத்தினால் பன்முகப்படுத்தப்பட்ட அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் 2017" இன் உடமல்லேஹேவ கிராமத்தின் சனசமூக மண்டப நிர்மாணத்திற்காக ரூபா 96,432 செலவிடப்பட்டு கட்டிட பொருட்கள் வழங்கப்பட்டிருந்த போதிலும் உரிய நிர்மாணம் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | செயற்திட்டங்களை செயற்படுத்தும் போது அடிக்கடி மேற்பார்வை செய்யப்படல் வேண்டும். | நிர்மாண நடவடிக்கை மேற் கொள்ளாத காரணத்தினால் ரூபா 50,000 தொகை விவசாய அமைப்பிடமிருந்து தற்போது அறவிடப்பட்டுள்ளது. |
| (ஊ) | படல்கும்புற பிரதேச செயலகத்தினால் "2017 தென்மாகாண வலய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்" இன் கீழ் 10 ஆம் கட்ட நலன்புரி சங்க கட்டிட நிர்மாணத் செயற்திட்டத்தின் கட்டிடத்தின் கொங்ரீட் தளத்தை (slab) இடுவதற்கு கம்பிக்காக ரூபா 133,701 தொகையும் அதன் சட்டலினுக்காக ரூபா 86,938 தொகையும் செலவிடப்பட்டிருந்தது. 2019 மே 14 ஆந் திகதி வரை அச் செயற்பாடு நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | முழு நிர்மாணத்தை பூர்த்தி செய்யும் வகையில் மதிப்பீடு தயாரிக்கப்பட்டு அதற்காக நிதி ஏற்பாடு பெற்றுக் கொள்ளப்பட்டு செயற்திட்டம் செயற்படுத்தப்படல் வேண்டும். | ஏற்றுக்கொள்கிறேன் |
| (எ) | படல்கும்புற பிரதேச செயலகத்தினால் "2017 தென் வலய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் கீழ் | செயற்திட்டம் நிறை வேற்றப்பட்டதன் பின்னர் | களஞ்சிய தாங்கியிலிருந்து |

| | | | |
|---|---|---|---|
| | அத்தலாமுல்லகம பூபுல அண்மித்த சமூக நீர் செயற்திட்டத்திற்காக ரூபா 1,970,122 செலவிடப்பட்டு செயற்திட்டம் பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. 2019 மே 14 ஆந் திகதி வரை செயற்திட்டம் பூர்த்தி செய்யப்பட்டு ஓராண்டிற்கு மேற்பட்ட காலம் கடந்திருந்த போதும் நலனாளிகளுக்கு நீர் வசதிகள் வழங்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்பார்க்கப்பட்ட நலன்களை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | குழாய்கள் இடப்பட்டு பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. |
| (ஏ) | கதிர்காமம் பிரதேச செயலகத்தினால் ''குளத்துடன் கூடிய கிராம நிகழ்ச்சித்திட்டம் - 2018'' இன் கீழ் கரவிலே சனசமூக மண்டபம் நிர்மாண செயற்திட்டத்தின் கட்டிடத்தின் உள்ளே பீவீசீ (PVC) உட்கூரை வழங்கி பொருத்துவதற்காக ரூபா 220,924 செலவிடப்பட்டிருந்தது. உட்கூரையை கூரையுடன் பொருத்துவதற்காக 40 மீ.மீ அளவிலான GI செனல் (GI channels) பயன்படுத்த வேண்டிய போதிலும் அவ்வாறு செப்தெம்பர் அதற்காக மிகவும் சிறிய அளவிலான கம்பி பயன்படுத்தப்பட்டிருந்தது. மதிப்பீட்டின் பிரகாரம் உட்கூரைக்காக பீ.வீ.சீ (P.V.C) உட் கூரை ஷீட் பயன்படுத்த வேண்டிய போதிலும் அவ்வகையான ஷீட் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | கட்டிட நிர்மாணத்திற்காக விலை விபரங்கள் (BSR) இல் குறிப்பிடப்பட்ட விகிதங்களுக்குரிய விதந்துரைகளின் பிரகாரம் கொடுப்பனவு செய்யப்பட வேண்டும். | ஏற்றுக் கொள்கிறேன். |
| (ஐ) | வெள்ளவாய பிரதேச செயலகத்தினால் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்ட அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் 2018" பிரதேசத்தினுள் 4 வீதிகளில் 68 வீதி விளக்குகளை பொருத்துவதற்கு ரூபா 194,000 வெள்ளவாய பிரதேச சபைக்கு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த போது வீதி விளக்குகள் பொருத்தியிருக்கவில்லை. | செலவினத்திற்குரிய நலன்கள் பொது மக்களுக்கு வழங்குவதற்கு துரித நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | வீதி விளக்குகள் பொருத்தும் நடவடிக்கை இடம்பெற்று வருகின்றன. |
| (ஒ) | வெள்ளவாய பிரதேச செயலகத்தினால் சுகாதார போசனை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சின் நிதி ஏற்பாடுகளிலிருந்து ரூபா 1,998,693 செலவிடப்பட்டு நிர்மாணிக்கப்பட்டிருந்த ஆயுர் | செலவினத்திற்குரிய நலன்கள் பொது மக்களுக்கு வழங்குவதற்கு துரித | கட்டிடத்திற்கு தேவையான உபகரணங்களை கொள்வனவு செய்வதற்கு நிதி ஏற்பாடு |

| | | | |
|---|---|---|---|
| | வேத பாதுகாப்பு சபைக்கான புதிய கட்டிடம் பயன்பாட்டிற்கு எடுக்கப்படாமல் விளைவற்றுக் காணப்பட்டன. | நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கோரப்பட்டுள்ளது. |
| (ஓ) | தனமல்வில பிரதேச செயலகத்தினால் மஹவெல பிரதேசத்தின் நில செவன கட்டிடத்தின் நிர்மாணத்திற்காக 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளின் போது ரூபா 2,431,786 செலவிடப்பட்டிருந்தது. அச் செலவினத்திற்கு ஞாபகார்த்த சின்னமொன்றை அமைப்பதற்கு ரூபா 15,000 உள்ளடக்கப்பட்டிருந்த போதிலும் ஞாபாகார்த்த சின்னம் நிர்மானிக்கப்படாதிருந்ததுடன் கட்டிடமும் பயன்பாட்டிற்கு எடுக்கப்படாமல் விளைவற்றுக் காணப்பட்டது. | பூர்த்தி செய்யப்பட வேண்டிய வேலைப் பகுதிக்காக மாத்திரம் கொடுப்பனவு செய்யப்படல் வேண்டும். கட்டிடம் நிர்மாணிக்கப்பட்டு எதிர்பார்க்கப்பட்ட நோக்கத்தை நிறைவேற்றுவதற்கு துரித நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களுக்காக ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஔ) | செவனகல பிரதேச செயலகத்தினால் பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சின் 2017 ஆம் ஆண்டிற்கான நிதி ஏற்பாடுகளின் கீழ் காளான் செய்கைக்காக கட்டிடமொன்றை நிர்மாணிப்பதற்காக 2018 ஆம் ஆண்டின் போது ரூபா 433,276 செலவிடப்பட்டிருந்தது. நிர்மாண நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்த போதிலும் காளான் செய்கை நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. | செலவினத்திற்குரிய நலன்கள் பொது மக்களுக்கு வழங்குவதற்கு துரித நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | தற்போது செயற்படுத்தப்படுவதாக அறிக்கையிடப்பட்டுள்ளது. |
| (ஃ) | செவனகல பிரதேச செயலகத்தினால் 2018 பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்ட நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் மஹகம பேக்கரி மாவத்தையின் நீர்முன்னேற்ற முறைமையை செயற்படுத்துவதற்காக 2 அங்குல மின்சார மோட்டார் ஒன்றும் ஸ்டாடொன்றும் கொள்வனவு செய்வதற்கு ரூபா 206,000 செலவிடப்பட்டிருந்தது. உரிய செயற்பாடு பூர்த்தி செய்யப்படாமல் கொள்வனவு செய்யப்பட்டிருந்த பொருட்கள் நலனாளிகளின் வீட்டில் வைக்கப்பட்டிருந்தன. | செலவு செய்யப்பட்ட செலவினத்திற்குரிய நலன்கள் பொது மக்களுக்கு வழங்குவதற்கு துரித நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் நிர்மாணத்திலிருந்து எதிர்பார்க்கப்பட்ட செயன் முன்னேற்றத்தை பெற்றுக்கொள்ள முடியுமாக இருக்கும். |

| | | | |
|---|---|---|---|
| (க்) | 04 பிரதேச செயலகங்களினால் அதிகாரப் பிரதேசங்களில் 09 செயற்திட்டங்களை செயற்படுத்துவதற்கு ரூபா 2,220,000 நிதி ஏற்பாட்டை தேசிய கொள்கை மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சிடமிருந்து கிடைத்திருந்த போதும் அவை செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. | அங்கீகரிக்கப்பட்ட அபிவிருத்தி முன்மொழிவுகளுக்காக அமைச்சிடமிருந்து கிடைக்கும் நிதி ஏற்பாட்டை முறையாக பயன்படுத்தி பொது மக்களின் எதிர்பார்ப்பு நிறைவேற்றப்பட வேண்டும். | செயற்திட்டத்தை செயற்படுத்த முடியாமைக்கான காரணங்கள் குறிப்பிடப்பட்டிருந்தன. |

### 3.4 பெறுகைகள்

-----------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | அரச பெறுகை வழிகாட்டல் கோவையின் 3.4 வழிகாட்டல் பிரகாரம் சந்தை ஒப்பிட்டு விலை முறைமை பயன்படுத்தி பெறுகை செய்யக்கூடிய பொருட்கள் மற்றும் சேவைகளின் பெறுமதி ரூபா 1,000,000 ஆக இருந்தது. அவ்வேலையை மிகைத்து 03 பிரதேச செயலகங்களினால் ரூபா 5.81 மில்லியனான கொள்வனவுகள் செய்யப்பட்டிருந்தன. | அரச பெறுகை வழிகாட்டல் கோவையின் ஏற்பாடுகளுக்கு இணங்க பெறுகைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கிறேன். |
| (ஆ) | வெள்ளாய பிரதேச செயலகத்தினால் இரண்டு அபிவிருத்தி வேலைத் திட்டங்களுக்குரியதாக 20 லீற்றர் அளவிலான 66 இயந்திர திரவ விசிறும் கருவிகள் கொள்வனவு செய்வதற்காக | பெறுகை செயற்பாடுகள் வெளிப்படையாக செய்யப்படல் வேண்டும் | இரண்டாவது கூறு விலை கோரும் போது தீவின் பிரபல்யமான நிறுவனங்கள் தொடர்பில் கவனம் செலுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| | இரண்டு சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்ட பெறுகை இரண்டு தீர்மானங்களை அடிப்படையாக கொண்டிருந்தன. அதில் இரண்டாவது சந்தர்ப்பத்தில் வழங்கப்பட்டிருந்த கூடிய விலைக்கு கொள்வனவு செய்வதற்கு தீர்மானிக்கப் பட்டாமையால் ரூபா 100,300 கூடுதலாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | | |
| (இ) | அரச பெறுகை வழிகாட்டல் கோவையின் 9.3.1 வழிகாட்டல் பிரகாரம் ரூபா இரண்டு இலட்சத்திற்கு மேற்பட்ட வாகனங்களை திருத்தம் செய்வதற்காக வரிசை அமைச்சு செயலாளரின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட வேண்டும். அவ்வாறு அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்படாமல் செவனகல பிரதேச செயலகத்திற்குரிய கெப் வண்டியொன்றை திருத்தம் செய்வதற்காக ரூபா 373,182 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | அரச பெறுகை வழிகாட்டல் கோவையின் ஏற்பாடுகளுக்கு இணங்க பெறுகைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். | எதிர்காலத்தில் பெறுகை செயற்பாட்டு சேவையின் ஆலோசனைகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும். |

## 3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

வெள்ளவாய பிரதேச செயலகத்தின் சொத்துக்கள் முகாமைத்துவம் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | பிரதேச செயலகத்தினால் 2008 மற்றும் 2009 ஆம் ஆண்டுகளின் போது ‘‘ஜாதிக சவிய கிராம எழுச்சி’’ விஷேட செயற்திட்டத்தின் கீழ் ரூபா 3,922,914 செலவில் தீர்மானிக்கப்பட்ட ஜனசபா அலுவலக கட்டிடம் நோக்கத்திற்குட்பட்ட செயற்பாடுகளுக்கு பயன்படுத்தப்படாமல் இயற்கை அழிவுகளுக்கு உட்பட்டு வந்தன. 2018 மார்ச் 22 ஆந் திகதி கூடிய பொதுக் கணக்கு குழுவின் 148 கூட்டத்தின் போது இக் கட்டிடத்தை பயனுள்ளதாக பயன்படுத்துவது தொடர்பாக விஷேட கவனமொன்றை செலுத்த வேண்டும்மென குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் அத் தீர்மானம் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. | விளைவற்ற வகையில் காணப்பட்ட அரச கட்டிடங்களை நோக்கத்திற்குட்பட்ட செயற்பாடுகளுக்கு பயன்படுத்தப்படல் வேண்டும். | கட்டிடத்தின் கூரை திருத்தம் செய்யப்பட்டதன் பின்னர் உதவி திட்ட பணிப்பாளரின் உத்தியோகத்தரால் பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) | பிரதேச செயலகத்திற்குரிய கணக்காளரின் அரச விடுதி கணனி பயிற்சி பாடநெறி யொன்றை நடாத்திச் செல்வதற்காக முறையான அங்கீகாரமொன்று இல்லாமலும் | அரசின் சொத்துக்களை முறையற்ற வகையில் பயன்படுத்துவது தொடர்பாக முறையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன் | எதிர்காலத்தில் நிறுவனத்துடன் உடன்படிக்கை மேற்கொண்டு பணத்தை அறவிடுவதாக |

| | | | |
|---|---|---|---|
| | உடன்படிக்கை யொன்று இல்லாமலும் வெளிப்படுத்தரப்பினருக்கு வழங்கி அரசின் சொத்துக்கள் முறையற்ற பாவனையில் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதற்காக வாடகை அறவீடும் இடம் பெற்றிருக்கவில்லை. | அங்கீகாரமின்றி வெளிதரப்பினர் அரச சொத்துக்களை பயன்படுத்துவதை தவிர்க்க வேண்டும். | அறியத்தருகின்றேன். |
| (இ) | அனர்த்த முகாமைத்துவ அமைச்சிற்குரிய நீர் பௌசரொன்று நான்கு வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக விளைவற்ற வகையில் பிரதேச செயலக வளவில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. உரிய திருத்த வேலைகள் மேற்கொள்ளப்பட்டு பயனுள்ள செயற்பாடுகளுக்காக பயன்படுத்தப்படாமல் அச் சொத்து உருக்குலைவதற்கு இடமளிக்கப்பட்டிருந்தது. | துரிதமாக திருத்தம் செய்து ஆக்கபூர்வ செயற்பாடுகளுக்கு பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்படல். | மோட்டார் வாகன பரிசோதகரினால் பரிந்துரை வழங்கப்பட்டதன் பின்னர் கிடைக்கும் ஆலோசனையின் பிரகாரம் எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். |

## 3.6 நட்டங்களும் சேதங்களும்

------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்கீட்டு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| | ------------------------------------------------------ | ---------------------------- | ---------------------------- |
| (அ) | சியம்பலாண்டுவ பிரதேச செயலகத்திற்குரிய கெப் வண்டியொன்றுக்கு இடம் பெற்றிருந்த நட்டத்திலிருந்து 25 சதவீதமான ரூபா 30,893 தொகையை சாரதியின் ஓய்வூதிய | பூரண அறிக்கையின் பரிந்துரையின் பிரகாரம் நட்டம் அறவிடப்பட வேண்டும் | குறித்த தொகையை கொடுப்பனவு செய்யுமாறு சாரதிக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| | பணிக்கொடையிலிருந்து அறவிடப்பட வேண்டுமென பூரண அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் 2019 மே 14 ஆந் திகதி வரை அந்நட்டம் அறவிடப்பட்டி ருக்கவில்லை. | | |
| (ஆ) | 02 பிரதேச செயலகங்களின் வாகனங்களுக்கு ஏற்பட்டிருந்த ரூபா 3.38 மில்லியன் நட்டத்தை புத்தகங்களிலிருந்து பதிவழிப்பதற்காக நிதிப் பிரமாணம் 109 இன் பிரகாரம் அமைச்சு செயலாளருக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும் 2019 மே 14 ஆந் திகதி வரை அதற்காக அங்கீகாரம் வழங்கப்பட்டிருக்கவில்லை. | திறைசேரியின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்ட புத்தகங்களிலிருந்து பதிவழிப்பதற்கு துரிதமாக நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | ஒரு விபத்து தொடர்பாக கோவையை மூடி விடுவதற்கு அமைச்சிலிருந்து அங்கீகாரம் கோரப்பட்டுள்ளது. மற்றைய் விபத்து தொடர்பான கோவையின் நடவடிக்கை பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. |
| (இ) | வெள்ளவாய பிரதேச செயலகத்திற்குரிய கெப் வண்டியொன்று 2002 செப்தெம்பர் 19 ஆந் திகதி விபத்திற்குட்பட்டிருந்ததுடன் நிதிப்பிரமாணம் 104(4) இன் அறிக்கையின் பிரகாரம் ரூபா 375,000 ஐ சாரதியிடம் ஆரம்பிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. இந்நட்டத்தை சாரதியிடமிருந்து அறவிடுமாறு 2013 ஏப்ரல் 23 ஆந் திகதி நடைபெற்ற அரச கணக்குகள் குழு கூட்டத்தில் கட்டளையிடப்பட்டிருந்த போதிலும் அக்கட்டளை வழங்கி 06 வருடங்கள் கடந்திருந்த போதிலும் அந்நட்டத்தில் ரூபா 300,000 அறவிடப்பட வேண்டியிருந்தது. | அரச கணக்கு குழுவின் பரிந்துரையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | எஞ்சிய பணத்தை அறவிடுமாறு வங்கி கல்வி அமைச்சின் செயலாளருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. |

### 3.7 முகாமைத்துவ பலவீனங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2015 திசெம்பர் 11 ஆந் திகதிய MO/RG/301 ஆம் இலக்க மதிப்பீட்டு அறிக்கையின் பிரகாரம் மாவட்ட செயலகத்திற்குரிய அரசின் உத்தியோகபூர்வ விடுதிக்காக மதிப்பீட்டு வாடகை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்காத காரணத்தினால் 2018 ஆகஸ்ட் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய நிலுவை வாடகை ரூபா 1,359,575 ஆக இருந்தது. | புதிய மதிப்பீட்டு அறிக்கையின் பிரகாரம் உத்தியோகபூர்வ விடுதிக்காக நிலுவை வாடகை அறவிடப்பட வேண்டும் | நிலுவை வாடகையை தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறவிக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) | 2010 ஆண்டு முதல் 2014 சனவரி மாதம் வரை பிபில பிரதேச செயலகத்தின் கணக்காளரின் அரச இல்லத்தில் குடியிருந்த கணக்காளரிடமிருந்து ரூபா 117,634 ஆன வாடகை குறைத்து அறவிடப்பட்டிருந்ததுடன் அதில் ரூபா 97,634 மேலும் நிலுவையாக இருந்தது. | முழு நிலுவை தொகையையும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | நிலுவை தொகை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் |

## 4 மனித வள முகாமைத்துவம்

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
| --- | --- | --- |
| 2001 ஆகஸ்ட் 22 ஆந் திகதிய 18/2001 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் பிரகாரம் ஒவ்வொரு சேவை நிலையத்திலும் சேவை புரியக்கூடிய ஆகக்கூடிய சேவைக் காலம் 05 ஆண்டுகளாகும். 09 பிரதேச செயலங்களில் சேவையில் ஈடுபட்டுள்ள 127 உத்தியோகத்தர்கள் 06 ஆண்டு முதல் 27 ஆண்டுகள் வரை ஒரே சேவை நிலையத்தில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். | சுற்றறிக்கையின் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் இடமாற்றம் மேற்கொள்ளப்பட வேண்டும். | வருடாந்த இடமாற்றத்திற்காக சகல பதவியணியினரும் உரிய மாதிரிப் படிவத்தின் மூலம் அமைச்சிற்கு அறிக்கையிடப்பட்டிருந்தது. |